IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | E.P. No.27/2008 | | |
| | | P/W's | : | 2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Sivalingam | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **05-08-2022**

<u>CHIEF EXAMINATION</u> :

நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை கிடைக்கபெற்றதின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுகாவில் நீரேத்தான் கிராமத்தில் கடந்த 01.09.2021ம் தேதியில் இருந்து கிராம நிர்வாக அலுவலராக நாளது தேதியில் பணியாற்றி வருகிறேன். அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் உள்ள ஆவணங்கள் கொண்டு வந்துள்ளேன். இதர ஆவணங்கள் யுடிஆர்-க்கு முன்பு ஏற்பட்டவை என்பதால் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பதிவேடு வைப்பறையில் இருப்பதாக என்னுடைய அறிவிப்பில் தெரிய வருகிறது.

வழக்கு சொத்திற்குண்டான வருவாய் ஆவணங்கள் யுடிஆர்க்கு பின்பு உள்ள ஆவணங்கள் எங்கள் அலுவலக கைவசம் உள்ளது. அவ்வாறு யுடிஆர்க்கு பின்பு உள்ள வழக்கு சம்பந்தப்பட்ட வருவாய் ஆவணங்கள் 01.04.1986 முதல் நீரேத்தான் கிராமத்தின் வருவாய் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

யுடிஆர்க்கு பின்பு தாவா வழக்கு சொத்தாக சர்வே எண்.10/6சி1 என்பது வருவாய் ஆவணங்களின் படி தலைவர், பஞ்சாயத்து போர்டு, வாடிப்பட்டி பஞ்சாயத்து என்று வருவாய் ஆவணங்களில் உள்ளது. மேற்படி சர்வே எண்.10/6சி1 என்பது யுடிஆர் கால கட்டத்தில் 01.04.1986 அன்று தங்களுடைய கோப்பில் யாருடைய பெயரில் உள்ளது என்றால் தலைவர், ஊராட்சி ஒன்றியம் என்ற பெயரில் தான் உள்ளது. அதேபோல சர்வே எண்.10/6சி2 யுடிஆர் கால கட்டத்தில் யார் பெயரில் இருந்துள்ளது என்றால் தமிழ்செல்வன், ராமச்சந்திரன் ஆகியோர்கள் பெயரில் உள்ளது. தமிழ்செல்வன் தகப்பனார் பெயர் என்னவென்றால் சுப்பாரெட்டியார் என்பவர் ஆவார். சர்வே எண்.10/6சி2 என்பது தற்போது யாருடைய பெயரில் உள்ளது என்றால் S.V. காந்தி என்பவர் பெயரில் உள்ளது. புல எண்.13/18 என்பது மேற்படி 01.04.1986 அன்று உங்களுடைய கோப்பில் யாருடைய பெயரில் உள்ளது என்றால்

தலைவர், தந்தை பெரியார் பிரச்சாரம் என்ற பெயரில் உள்ளது. மேற்படி புல எண்.13/18 என்பது தற்போது யாருடைய பெயரில் உளள்து என்றால் பஞ்சவர்ணம் மற்றும் ஒருவர் பெயரில் உள்ளது. சர்வே எண்.13/101 என்பது மேற்படி 01.04.1986 அன்று உங்களுடைய கோப்பில் யாருடைய பெயரில் உள்ளது என்றால் யுடிஆர் கால கட்டத்திற்கு பின்பு உட்பிரிவு செய்யப்பட்டது. அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டது யாருடைய பெயரில் என்றால் ராமச்சந்திரன் என்பவர் பெயரில் உள்ளது.

எப்போது உட்பிரிவு செய்யப்பட்டது என்ற விபரம் ஆவணத்தில் இல்லை. சர்வே எண்.13/114 என்பது யாருடைய பெயரில் எப்போது மாற்றம் செய்யப்பட்டது என்றால் 02.03.2009ல் சீனிவாசன் மகன் S.V. காந்தி என்பவர் பெயரில் மாறுதல் செய்யப்பட்டது. சர்வே எண்13/7பி2ஏ-ல் இருந்து சர்வே எண்.13/114 ஆக S.V காந்தி என்பவர் பெயருக்கு மாறுதல் செய்யப்பட்டது. சர்வே எண்.13/7பி2ஏ என்பது  01.04.1986 அன்று உங்களுடைய கோப்பில் யாருடைய பெயரில் உள்ளது என்றால் சுப்பாரெட்டியார் மகன் தமிழ்செல்வன் என்பவர் பெயரில் உள்ளது. தற்போது யாருடைய பெயரில் உள்ளது என்றால் சர்வே எண்13/7பி2ஏ என்பது சர்வே எண்.13/113 ஆக கவிதா மற்றும் 3 நபர்கள் பெயரிலும், சர்வே எண்.13/114 என்பது காந்தி என்பவர் பெயரிலும் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

சர்வே எண்.13/20 என்பது யுடிஆர் காலகட்டத்தில் யாருடைய பெயரில் உள்ளது என்றால் பூமிநாதன், வெ.நாராயணன், ரா.சுப்பம்மாள் ஆகியோர்கள் பெயரில் உள்ளது. தற்போது யாருடைய பெயரில் உள்ளது என்றால் ரமேஸ் மற்றும் ஒருவர் பெயரில் உள்ளது. சர்வே எண்.13/22 என்பது யுடிஆர் காலகட்டத்தில் யாருடைய பெயரில் உள்ளது என்றால் மு.ராமையா என்பவர் பெயரிலும், தற்போது கோ.ராமுரெட்டியார் என்பவர் பெயரிலும் உள்ளது. சர்வே எண்.13/25 என்பது யுடிஆர் காலகட்டத்தில் யாருடைய பெயரில் உள்ளது என்றால் வே.சங்கப்பரெட்டியார் என்பவர் பெயரிலும், தற்போது பி.சண்முகவேல் என்பவர் பெயரிலும் உள்ளது.

சர்வே எண்13/7பி2ஏல் அடங்கிய சர்வே எண்.13/7பி ஆனது எந்த பகுதியில் அமைந்துள்ளது என்றால் கிழக்கு பக்கம் அமைந்துள்ளது. சர்வே எண்.10/6சி1, சர்வே எண்.10/6சி2 மற்றும் சர்வே எண்.13/7பி2ஏ, சர்வே எண்.13/18, 13/101, 13/20, 13/22, 13/25 ஆகிய சொத்துக்கள் அடங்கல் பதிவேட்டில் 1986 முதல் காமணப்பிள்ளை மற்றும் அவரது வாரிசுகளான தமிழ்செல்வன், போஸ் மற்றும் ஆதிமூலம்பிள்ளை, சுப்பம்மாள் ஆகியோர்கள் பெயரில் இல்லை. அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்கள் தொடர்பாக நான் கொண்டு வந்துள்ளேன். அவைகளை அசல் ஆவணத்துடன் நகல் ஆவணத்தை ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்திட வேண்டி பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரால் அனுமதி கோரப்பட்டு சமூகம் நீதிமன்றத்தால் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு,

நீதியின் நலனுக்குட்பட்டு குறியீடு செய்திட அனுமதிக்கப்படுகிறது. **<u>மேற்படி ஆவணங்கள் சா.சா.ஆ.1 முதல் 22 ஆக குறியீடு செய்திட உத்தரவிடப்படுகிறது</u>**.

**<u>குறுக்கு விசாரணை (எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில்) :</u>**

உங்களுக்கு நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கபெற்ற அழைப்பாணையில் எந்தெந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க வேண்டி அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். நீதிமன்றத்தால் உங்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையில் சர்வே எண்.10/6சி, 13/7பி, 13/7இ ஆகிய சொத்துக்களுக்கு உண்டான வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்யப்பட்டு சாட்சியம் அளித்திட உங்களுக்கு அழைப்பாணை வந்தது என்றால் ஆம். சரிதான். மேலே கண்ட 3 புல எண்களுக்கு உண்டான ஆவணங்கள் தவிர இதர புல எண்களுக்கு உள்ள ஆவணங்கள் எதன் அடிப்படையில் உங்களால் சாட்சியம் அளிக்க கொண்டு வரப்பட்டது என்றால் சர்வே எண்.10/6சி, 13/7பி, 13/7இ ஆகிய புல எண்கள் உட்பட இதர புல எண்களும் சேர்ந்து தான் ஆவணமாக இருந்து வருகிறது.

சர்வே எண்.10/6சி பஞ்சாயத்து தலைவர், வாடிப்பட்டி போர்டு என்பவர் பெயரில் உள்ளதாக உங்களால் முதல் விசாரணையில் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே E.P.27/2008ல் வாடிப்பட்டி பஞ்சாயத்து போர்டு உட்பட அனைவரும் தாக்கல் செய்த இடைநிலை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. சர்வே எண்.10/6சி, 13/7பி, 13/7இ ஆகிய சொத்துக்களுக்குண்டான யுடிஆருக்கு முன்பு உள்ள வருவாய் ஆவணங்கள் குறித்து விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணங்களை உங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, சாட்சியம் அளிக்கப்படுகிறது. உங்களது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் அது சரியல்ல.

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி